19 காலணா Regd. No. M. 2811.

சுதந்திரச் சங்கு

" சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தாணிக் கெல்லா மெடுத்தோதுவோமே "

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மண்யன்.

போன் நே. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. சனி 11-3-33

ACC-NO-10813

திரைக்குப் பின்னால்



—*Adapted from "Hindustan Times"*

பெரிய சர்க்கஸ் கச்சேரியைக் காண்பதற்காக திரளான கூட்டம் வந்திருக்கிறது. திரைக்குப் பின்னால் எல்லாம் தயாராகி விட்டது. கைக் கெடியாரத்தைப் பார்த்துக் கொண்டு மாக்டனல்டு என்ற நட்டுவர் நின்று கொண்டிருக்கிறார். வில்லிங்டன் என்ற ஹார்மோனியக்காரன் முதல் பாட்டை வாசித்து முடித்து விட்டான். திரை தூக்க வேண்டியது தான் பாக்கி! திரைக்குப் பின்னால் நிற்கும் நாட்டியக்காரியின் பெயர் யாது? 'வெள்ளைக் கடுதாசி' என்று அவள் விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறாள். ஆனால் அவள் முன்னொருக்கால் நடித்த "ஸைமன் அறிக்கை"யே என்பதை நாம் அறிவோம்.

பிரசவிக்கும் நாள்

வருகிறது! வந்து கொண்டே இருக்கிறது! எது? எது? இந்தியாவுக்கு வெள்ளைக் கடுதாசி. பத்தாவது மாதத்தில் கர்ப்ப ஸ்திரீ எந்த நிலைமையில் இருப்பாளோ அந்த நிலைமையில் இப்போது பிரிட்டிஷ் துரைத்தனம் இருக்கின்றது. சாதாரணமாக கர்ப்பங்கள் பத்து மாதம் தான் வயிற்றிலிருக்கு மென்பார்கள். ஆனால் இந்த வெள்ளைக் கடுதாசி என்ற பிண்டம் வளருவதற்கு மூன்றரை வருடங்களாகி யிருக்கிறதாம்.

ஸைமன் ஸப்த ரிஷிகள் வரப் பிரசாதமாகத் தந்த மாங்கனியை உண்டு இந்தக் கர்ப்பம் ஏற்பட்டதென்று சொல்கிறார்கள். இந்தக் கர்ப்பத்திற்கான மசக்கைச் செலவிருக்கின்றதே, அது அபாரமாக ஆகியிருக்கின்றது. கர்ப்ப ஸ்திரீ சுவைப்பதற்காக 'வட்ட மேஜைகள்' என்ற தின்பண்டத்தை மூன்று தடவை தயாரித்ததற்கு பல லக்ஷ ரூபாய்கள் செலவாகி யிருக்கின்றன. பிறக்கப் போகின்ற பிள்ளை இத்தனை செலவுக்கும், இத்தனை போஷிப்புக்கும் உகந்ததாக இருக்கப் போகின்றதா ?

யானை குட்டி போட்ட கதையாகவே இந்த வெள்ளைக் கடுதாசி பிரசவம் இருக்கப் போகிறது என்று பலர் பல தடவை சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஏமாறப் போகின்றவர்கள் மிதவாதிகள் தான்! "பிரிட்டிஷ் துரைத்தனத்தார் மலடியன்று! இந்தியாவுக்குக் கட்டாயமாக ஏதாவது பிரஸவித்துத் தருவார்கள்" என்று ஆதி முதல் நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் ஸாப்ரூ கோஷ்டியார். அவர்களுடைய ஆசை தீர ஒரு குழந்தை பிறக்கப் போகின்றது. வைஸ்ராய்க்கு விசேஷ அதிகாரங்கள், கவர்னர்களுக்கு ஸர்வாதிகாரங்கள் முதலிய கோரப் பற்களையும், நகங்களையும் 'குழந்தை'யிடம் மிதவாதிகள் காணப் போகின்றனர்.

அடுத்த 17-ம் தேதியன்று வெள்ளைக் கடுதாசியை சீமையில் பார்லிமெண்டில் ஸமர்ப்பிப்பார்களாம். 18-ம் தேதியன்று உலகுக்கு அது காட்டப்படுமாம். 'வெள்ளைக் கடுதாசி' என்றால் இந்தியர்களுக்கு நன்மையாக ஏதுவும் எழுதப்படா வெற்றுக் காகிதமென்று பெயர். 'வெள்ளைக் கடுதாசி' என்றால் வெள்ளையர்களுக்கு அநுகூலமானவைகளை உடையதென்று பொருள்படும். இதை மிதவாதிகள் அறிவாராக!

மீசைக்கு எண்ணெய்க் கதை

ஒரு குப்பைக் காட்டான் தன் குடிசை வாசலில் குந்திக் கொண்டு தன் மீசைக்கு எண்ணெய் தடவி உருவிக் கொண்டிருந்தான். அந்த ஊரிலிருந்த இன்னொரு குடியானவன் அவனருகே வந்து, "தம்பி! என்னப்பா ரொம்ப மும்முரமாக மீசைக்கு எண்ணெய் போடுகிறாய்?" என்று கேட்டான். அப்போது குப்பைக் காட்டான் சொன்னான், "என் அண்ணே! உனக்குக் கண்ணில்லையா? அதோ பலா மரத்திலே எவ்வளவு பிஞ்சுகள் காய்த்திருக்கின்றன பார்!" என்று கூறிவிட்டு மீசைக்கு எண்ணெய் போட ஆரம்பித்தான். வந்தவனுக்கு விஷயம் விளங்கவில்லை. "மரத்திலிருக்கும் பலாப் பிஞ்சுக்கும் உன் மீசைக்கும் என்ன சம்பந்தம்?" என்று மறுபடியும் கேட்டான். குப்பைக் காட்டான் "என்ன அண்ணே மடையனாயிருக்கிறாயே! அந்த பிஞ்சுகளெல்லாம் முற்றி விட்டால் எவ்வளவு பலாப் பழம் எனக்குக் கிடைக்கும் தெரியுமா? எவ்வளவு தான் சந்தைக்குக் கொண்டு போய் விற்றாலும் என் வீட்டில் ஏராளமாக பலாப் பழம் இருந்து கொண்டே யிருக்குமே! பலாப் பழத்தின் பால் பிசுக்குப் பிசுக்கென்று ஒட்டிக் கொள்ளும். ஆகவே பலாச் சுளை தின்னும் போது மீசையில் அது ஒட்டிக் கொள்ளக் கூடாதல்லவோ, அதற்காகத் தான் மீசைக்கு எண்ணெய் போட்டுக் கொள்கிறேன்" என்றானும். இந்தக் குப்பைக் காட்டானின் முன்னெச்சரிக்கை முதல் தரமான தல்லவா ?

இந்தியாவில் ஐக்கிய அரசியல் திட்டம் அமுலுக்கு வந்தால் அதில் பர்மா சேருவதா வேண்டாமா வென்று தகராறு, வம்பு, சர்ச்சை, வாக்குவாதம் எல்லாம் நடைபெறுகின்றன. "இஷ்டப்பட்டபோது இந்தியாவினின்று பிரிந்து கொள்ள உரிமை வேண்டும்" என்று சில பர்மியர்கள் சொல்கிறார்கள். "பிரிவினை வேண்டுமா, வேண்டாமா இப்போதே கண்டிப்பாய்ச் சொல்லி விடுங்கள்" என்று ஸாமுயேல் ஹோர் சீமையினின்று சொல்வது கதையில் குப்பைக் காட்டான் மீசைக்கு எண்ணெய் போட்ட தினுஸாகவே இருக்கிறது.

—அ. ப. பத்திரிகை.

மகா மகப் பலன்கள்

மகா மகம் வந்தது போலப் போய் விட்டது. மாதக் கணக்காக இந்த உற்சவத்தை நமக்கு நினைப்பூட்டி, பிரசாரம் செய்து, பிரதி தினமும் பதினாயிரம் பேர் வீதம் கும்பகோணத்தில் கொண்டு போய் இறக்கி, காசு பறித்துக் கொண்ட ரயில்வேக் கம்பெனிக்காரர்கள் அடுத்த மாமாங்கத்தையே ஆவலோடு எதிர் பார்க்கின்றார்கள். ஒரு வாரமாக கும்பகோணம் 'கும்பல் கோண'மாக இருந்த தென்னலாம்.

பக்தியோடு மாமாங்க ஸ்னானம் செய்து புண்ணியம் கட்டிக் கொண்டவர்களைப் பற்றி யாரும் கவலைப்பட மாட்டார்கள். ஏனெனில் பக்தி அதிகமாக ஆக இடியும், மோதலும் தான் அதிகமாகும். அவ்வளவு கஷ்டத்தையும் அவர்கள் உடல் பொறுத்ததற்குக் காரணம் அவர்கள் மனம் எதையோ ஒன்றை நாடி யிருந்ததே யாகும். ஆனால் இந்த வருட மாமாங்கத்தில் கேவலம் வேடிக்கை பார்க்க வந்த கார்கைக் கும்பலைக் கண்ட போது "அடடா! இதுவா பணப் பஞ்ச காலம்!" என ஐயுறலாம்.

அவ்வூரில் தண்ணீரைக் காப்பி யென்று விற்றவர்களின் லாபத்தில் தம்பிடியாவது கேட்டால் கொடுப்பார்களா? நாடகம், சினிமா கம்பெனிக்காரர்கள் காலணாவையாவது விட்டு விடுவார்களா? ஆங்காங்கு எத்தனை வேஷ்டித் திருட்டு, எவ்வளவு புடவைத் திருட்டு; அந்த சில்லரைத் திருட்டுகளின் முன்னே சமுத்து மணி அறுக்கும் திருட்டு கூட அவ்வளவு பெரிதன்று. ஆனால் வளையம், சீட்டு, குறி சுடல் முதலிய கருவிகளின் உதவியால் ஊரைப் பகிரங்கக் கொள்ளை யடித்த கூட்டத்தை சர்க்கார் தடுத்திருக்கலாகாதா?

கும்பகோணக் கும்பலினின்று ஒன்று மட்டும் விசதமாகத் தெரிந்தது. வைத்திய வசதிகளும், இதர முன்னேற்பாடுகளும் ஏராளமாகச் செய்யப்பட் டிருந்ததால் தானென்ன? நமது மக்களிடம் உள்ள இயற்கையான கெட்ட ஸ்வபாவங்களைப் போக்க எந்த மருந்தைத் தருவது? ஊரை ஆபாசம் செய்யலாகாதென்ற நல்லெண்ணம் நம்மவரில் ஆயிரத்தி லொருவருக்காவது உண்டா என்ற ஐயமே ஏற்பட்டது.

மாமாங்கம் வந்தது; போய் விட்டது. இந்த மாமாங்க ஸ்னானத்தோடாவது நாட்டைப் பிடித்திருக்கும் பீடைகள் ஒழியுமா என்பதே தேசபக்தர்களின் கேள்வி.

அதிர்ஷ்டசாலி யார்?

யாருக்காவது நல்ல சகுனம் ஆக வேண்டுமானால் நரி முகத்தில் விழிக்க வேண்டுமென்பார்கள். ஆனால் அந்த நரிக்கு நல்லதிர்ஷ்டம் வேண்டுமானால் அது சென்னைச் சட்ட சபைக்கு ஓடி வந்து கிருஷ்னன் நாயர் என்ற சட்ட மந்திரியின் முக விலாசத்தை தரிசித்து விட்டுப் போக வேண்டும். ஏனெனில் கிருஷ்னன் நாயர் அவ்வளவு அதிர்ஷ்ட சாலி!

சட்ட மந்திரி பதவி யென்றால் அதற்கு ஐந்து வருடம் தான் ஆயுள்! அந்த நியதிப்படி கிருஷ்னன் நாயர் உத்தியோகத்துக்கு வந்து அடுத்த ஏப்ரல் மாதம் 25ம் தேதியோடு ஐந்து வருடம் கணக்காக ஆகி விடுகின்றது. அத்துடன் அவர் விலக வேண்டியது தான். ஆனால் சர்க்காருக்கு மிக்க நல்ல பிள்ளையாக நடந்து கொண்ட கிருஷ்னன் நாயருக்கு சன்மானம் கிடைத்திருக்கிறது. அவருடைய உத்யோகத்தை அவர் இன்னொரு வருடம் அநுபவிக்குமாறு சர்க்கார் உத்தர விட்டிருக்கிறார்களாம்.

ஆலை யில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை என்பார்கள். இந்த நாயர் வருவதற்கு முன்னால் சட்ட மந்திரிக்கு போலீஸ் அதிகாரம், ஜெயில் நிர்வாகம் முதலிய பல அதிகாரங்களிருந்தன. ஐந்து வருடங்களுக்கு முன்னே சட்ட மந்திரி உத்தியோகத்தினிடமிருந்து பல்லைப் பிடுங்கியதுபோல 'போலீஸ் நிர்வாக'த்தை சர்க்கார் பறித்து விட்டது. அந்த உத்யோகத்துக்கு வரவேண்டு மென்று ஒருவரை சர்க்கார் கேட்டிருந்தது. திடீரென்று அந்த ஆள் முறைத்துக் கொண்டார். "சட்ட மந்திரிக்கு போலீஸ் அதிகாரம் இல்லையாயின் எனக்கு அந்த உத்தியோகம் வேண்டாம்" என்று அவர் உத்யோகத்தை உதைத்து விட்டார். 'சட்ட மந்திரி பதவி' பிச்சைக்காரனைப் போல அலைந்தது. இந்த 'சான்ஸை' கிருஷ்னன் நாயர் விடுவாரா? "போலீஸ் நிர்வாகம் இருந்தாலும் இல்லா விட்டாலும் பரவாயில்லை. உத்யோகம் தான் புருஷ லக்ஷணம்" என்று அந்தப் பதவியைப் பிடித்துக் கொண்டார்.

ராஜீயக் கைதிகளுக்கு "மோரில்லை, மோரில்லை" என்று ஜபம் செய்த கிருஷ்னன் நாயருக்கு ஒரு வருடம் உத்யோகம் நீண்டிருக்கின்றது. இனி "சோறில்லை சோறில்லை" யென்று சொல்வாரானால் சாசுவதமாக இந்த உத்யோகத்திலேயே இருந்தாலும் இருப்பார்.

செட்டிக்கு சுக்கிர தசை!

ஒருவர் ஜாதகத்தில் சுக்கிர தசை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தால் இன்னொருவர் கட்டாயமாக சனியனின் அணைப்பில் விழுந்தே தீரவேண்டும். நமது ஒட்டாவா வீரரான ஷண்முகம் செட்டிக்குச் சுக்கிரனின் கடாக்ஷப் பார்வை ஏற்பட்டு விட்டிருக்கையில், டில்லி சட்ட சபைத் தலைவரான ஸர் அப்துர் ரஹிமதுல்லாவை என்னமாச் சனியன் பிடிக்காமலிருக்கும்? ஆகவே அவர் தேக அசௌக்கியம் காரணமாகத் தமது பதவியை ராஜிநாமாச் செய்து விட்டார். அந்த ஆசனம் இனி ஷண்முகத்துக்குத்தான் என 'வில்' வைத்தாகி விட்டதாம்.

இன்னொரு அபேட்சகரான யாமின்கானை ஆதரிப்பதில்லை யென்றும், செட்டிக்கே வாக்களிப்பதென்றும் ஐரோப்பியக் கோஷ்டி ஒருமிக்க நிர்மானித்துளதாம். ஒரு காலத்தில் வித்தல்பாய் படேல் என்ற சிங்கம் உட்கார்ந்து கொண்டு கர்ஜித்த இடத்தில் இன்று ஷண்முகம் செட்டியின் சுண்டெலிக் குரல் கேட்கப் போவதை எண்ணுகையில் அந்தத் தலைமைப் பதவி இந்த நிலைமைக்கு வர வேண்டுமா என பலருக்குத் தோன்றுகின்றது.

சரி, எப்படியும் செட்டியார் 'பிரேஸ்' அடித்து விடப் போகிறார்! நல்ல பிள்ளையாக இருந்து சர்க்காருக்காக அவர் வால் பிடித்ததற்குச் சரியான சன்மானம் அவருக்குக் கிடைத்து விட்டது. அஸெம்பிளியில் சர்க்கார் தாஸர்கள் வேண்டிய அளவிற்கு இருக்கையில், நியமனம் செய்யப்பட்ட கைகாட்டி மரங்கள் இருக்கையில், அவருக்கு என்ன குறைவு? அஸெம்பிளியின் காலம் நீடிக்கப் பட்டிருப்பதும் ஷண்முகத்தின் அதிர்ஷ்டம் தானே! ஒட்டாவாப் பிரயாணத்தினால் ஏற்பட்ட சுகத்தின் அனுப் புத்திர இனி செட்டியார் சட்ட சபைத் தலைமைப் பதவியின் சுகமனுபவிக்கப் போகிறார் போலும்! ஆனால் இவர் மீது பொது மக்களுக்கு என்ன அபிப்பிராயம் ஏற்பட்டு விட்டதென்பதை விவரிக்கத் தேவையில்லை.

இதுவரையிலிருந்த எல்லாத் தலைவர்களிலும் இவர்தான் மிகச் சிறியவர் எனச் சொல்லப்படுகிறது. வாஸ்தவம் தான். டில்லி சபைத் தலைமைப் பதவிக்கு மட்டுமின்றி, ராஜீயத்திற்கும் சரி, எந்த உலக வியவகாரத்திற்கும் சரி அவர் ரொம்பச் சின்னவர், கற்றுக்குட்டி என்பதே பலரது அபிப்பிராயம்.

அறிக்கை "ஸ்வாஹா"வா?

எந்தச் சிறையிலிருந்து தீண்டாமைப் பிசாசை அடித்து விரட்ட உத்தேசித்து, ஸ்ரீயுத பட்டவர்த்தன் உண்ணு விரத மிருந்தாரோ அந்தச் சிறையை விட்டு இன்னும் அந்தத் தீண்டாமைப் பேய் அகன்றதாகத் தெரிய வில்லை. பம்பாய்ச் சட்ட சபையில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், "ஜாதி ஹிந்துக்களுக் கென்று ஒரு தொட்டியிலும், தாழ்த்தப்பட்டவர்களுக்காக இன்னொரு தொட்டியிலும் தண்ணீர் நிரப்பப் படுகின்றது; ஜாதி ஹிந்துக்களின் தொட்டியில் தாழ்த்தப்பட்டவர்கள் தண்ணீர் எடுத்தால் அவர்கள் தண்டிக்கப்படுகின்றனர்" என்று ஹோம் மெம்பர் சொன்னார். பொது இடங்களில் தீண்டாமையே அனுஷ்டிக்கப்படக் கூடாதென்றும், தாழ்த்தப்பட்ட மக்களையும் சேர்த்துக் கொள்ளாத பள்ளிக்கூடங்களுர்கு லைசென்ஸ் கொடுக்க முடியாதென்றும் அன்று ஒரு நாள் ஒரு அறிக்கையை வெளியிட்டு விட்டு, இன்று பம்பாய்ச் சர்க்கார் ரத்னகிரி ஜெயிலுக்குள் தீண்டாமைக்குத் தூபம் போட்டு வருவது, குழந்தையைக் கிள்ளிவிட்டு விட்டுத் தொட்டிலையும் ஆட்டுவதையே ஒத்திருக்கின்றதல்லவா?

சமீப காலத்தில் தோட்டி வேலையைச் செய்வதற்கு அனுமதி கோரி ஸ்ரீயுத பட்டவர்த்தனும், மகாத்மாஜீயும் பட்டினி கிடக்கையில் சிறைக்குள்ளும் தீண்டாமையை ஒழிக்கவே கருதினர். பட்டவர்த்தனின் கோரிக்கைக்குச் சர்க்கார் இணங்கியதன் மூலமாக, அவர்கள் சிறைத் தீண்டாமைக்குச் சாவு மணி அடித்தனர் என்றே நாம் எண்ணினோம். ஆனால் விஷயமோ வேறாக இருக்கின்றது. பம்பாய்ச் சர்க்கார் தன் அறிக்கையைத் தானே "ஸ்வாஹா" பண்ணி விட்டதா? தீண்டாமையை ஒழிக்கும் விஷயத்தில் தேசம் பூராவுமே கண் விழித்துக் கொண்டிருக்கையில், அவர்கள் மட்டும் இன்னும் தூங்குவானேன்? ஒவ்வொன்றுக்குமா பட்டவர்த்தன் பட்டினி கிடந்து அவர்களுக்குப் புத்தி கற்பிக்க வேண்டும்? அவரது பட்டினி வரைக்கும் விஷயத்தை முற்ற விடாமல் சர்க்கார் உடனே கடனாற்றுவார்களா?

மகாத்மா காந்தி எழுதிய
இல்லறமும் பிரும்மசரியமும்
(சங்கு ஸுப்ரஹ்மணியன் மொழிபெயர்த்தது.)
(தபாற்கூலி உட்பட 7 அணு ஸ்டாம்பு அனுப்பவும்.)

வர்ணாசிரமத்தின் மகிமை

(மகாத்மா காந்தி)

தொழிலும், கடமையும் ஒழுங்காக நிறைவேறுவதற்காகவே வர்ணாசிரம முறை வகுக்கப்பட்டது. எந்த மதப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தாலும் இது விளங்கி விடும். இப்படியாக நான்கு ஜாதிகள் ஏற்பட்டன. பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்பவையே அவை. ஞான ஒளியைப் பரப்ப பிராம்மணரும், நாட்டைக் காக்க க்ஷத்திரியரும், செல்வத்தைக் குவிக்க வைசியரும், சேவைகள் புரிய சூத்திரரும் ஏற்படுத்தப் பட்டனர். தர்மத்தைக் காத்து, போற்றி, வளர்க்க இந்நால்வரும் தம் தம் கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டும்.

இந்நால்வரில் எவரும் உயர்ந்தவரல்ல; எவரும் தாழ்ந்தவரல்ல. யாவரும் ஸமமே. இதில் தீண்டாமைக்கு இடமேயில்லை. இதுதான் சுத்த வர்ண தர்மம். இத்தகைய தர்மம் இன்று இல்லாமலிருக்கலாம். இல்லையென்பதும் உண்மையே. ஆதி வர்ணாசிரம தர்மத்தை அப்படியே இப்பொழுது உயிர்ப்பிக்க முடியவில்லையெனின், என்னைப் போன்றவர்கள் அதை ஒரு விபத்தாகவே கருதுவர். ஆனால் இந்தப் பரிசுத்தமான வர்ண தர்மத்தில் 'தீண்டாமை' என்ற விஷத்தைக் கொண்டு நுழைத்து, மூளையைக் குழப்பிக் கொள்ள வேண்டாம்.

உண்மையான வர்ண தர்மத்தை நாம் அனுஷ்டித்தால், இன்று நாம் காணும் பல சமூக ஊழல்களும், பணக் கஷ்டமும் இருக்க நியாயமேயில்லை. ஏனெனில் செல்வத்தைச் சமமாகப் பங்கிட வேண்டுமென வர்ணாசிரம தர்மம் போதிக்கின்றது. இந்த நீதியை அறிந்து பல்லாண்டுகளாக ஜனங்கள் இதைப் பின்பற்றி நன்கு வாழ்ந்தனர். ஆனால் இன்றோ உலகம் நாகரிக மயக்கில் விழுந்து, தர்மத்தை கை விட்டுத் தவிக்கின்றது.

ஆல விருக்ஷத்தின் கணக்கற்ற கிளைகளைப் போன்று இன்று எண்ணிக்கையற்ற ஜாதிகள் தோன்றுகின்றன. ஆனால் இவை தோன்றித் தோன்றி அழியும் இயல்புடையன. இவற்றிற்கும் வர்ணாசிரம தர்மத்திற்கும்—என் மதத்திற்கும் கூட—யாதொரு சம்பந்தமுமில்லை. அறியாமை காரணமாகவே ஸனாதனிகள் இவற்றை ஹிந்து மதத்தின் அம்சங்களாகக் கருதி வருகின்றனர். —ஹரிஜனம்.

ஏழைத் துயர் தீர்க்கும் கதர்

(ஸ்ரீயுத ராஜாஜியின் கடிதம்)

"பாமர மக்களின் இன்ப, துன்பங்களிலும், பசியிலும், தாகத்திலும் கல்வி பயின்ற உயர் வகுப்பினரும் பங்கெடுத்துக் கொள்ளாத வரையில் அவர்களால் இந்திய முன்னேற்றத்திற்கு உண்மையில் உதவி செய்ய முடியாது. நகரங்களிலுள்ள உயர் வகுப்பினரையும், கிராமங்களில் வசிக்கும் ஏழை மக்களையும் ஒன்று சேர்த்துப் பிணைப்பது கதர் தான். தன் உடலின் மீது கதர்த் துணியை அணிபவனின் உள்ளத்தில் ஏழையைப் பற்றிய எண்ணம் எப்பொழுதும் இருந்து கொண்டேயிருக்கிறது. இந்திய மில் துணி நல்லதாயிருக்கலாம்; ஆனால் இந்தியாவிலுள்ள ஏழு லக்ஷம் கிராமங்களையும் அடியோடு அழித்து, நாட்டிலுள்ள முப்பது கோடி மக்களையும் நகரப் பித்தம் பிடித்தவர்களாக மாற்றுவதென்ற எண்ணமிருந்தாலொழிய இந்தத் தேசத்தில் ஆலைகளை நடத்துவதால் அனர்த்தமே விளையும். கிராம வாசிகளின் பட்டினியையும், துயரையும் கதரால் தான் நாம் போக்க முடியும்."

கலியாணத்தில் 'ஜீவனாம்சம்'

இந்தியாவுக்கு ஐக்கிய அரசியல் திட்டம் வரப் போகின்றதா இல்லையா, வந்தால் எப்படியிருக்கப் போகின்றது எல்லாம் இன்னும் தொங்கலாகவே யிருக்கின்றது. அதற்குள் சில பேர்கள் அது சம்பந்தமாக பற்பலவிதமாக வாதித்துச் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். கல்யாணம் நடைபெறப் போகிறதோ இல்லையோ, அதுவே சந்தேகம்! அப்படியிருக்கும் போது கல்யாணம் பண்ணிக் கொள்ளும் பையனுக்கும் பெண்ணுக்கும் பிற்காலத்தில் தகராறு வந்து விட்டால் 'ஜீவனாம்சம்' எவ்வளவு தருவது என்ற பிரச்னையைப் பற்றி கல்யாணப் பந்தலிலேயே வாதிப்பாருண்டா? அது அபசகுனமன்றோ? இந்தியா-பர்மா பிரிவினை வாதம் அப்படித்தானிருக்கிறது.

மகாத்மா காந்தி எழுதிய
சத்திய சோதனை
இரண்டு பாகமும் விலை 3½ ரூபா.
தபால் கூலி வேறு.

முட்டையினின்று மனிதனா?

பசுவின் முட்டை விடும்! எசமானனுக்கு அவசியமானால் தங்க முட்டைகள் போட்டாலும் போடும்; ஆனால் முட்டையினின்று மனிதக் குஞ்சு பிறக்குமா? அதே போல மாக்டனல்டின் வகுப்புப் பிரச்னைத் திட்டம் ஒரு கோழி முட்டை. அதன் காரணமாக ஜாதிப் பித்தர் கோஷ்டிகள் ஏற்படுமே யன்றி, தேசியக் கட்சி தோன்றவே தோன்றாது. புதிய அரசியல் வந்தால், கட்சிகளும் பத்திரிகைகளும் அதிகமாகு மென்று சவடாலடித்த ஸ்டான்லே ஜாக்ஸனுக்கு 'அமிர்த பஜார்' பத்திரிகை சரியான பதில் தந்திருக்கிறது.

கஸின்ஸை விடுதலை செய்!

சென்னையில் கைதியாக்கப்பட்டு இன்று வேலூர் சிறையில் ஒரு வருட தண்டனையை அனுபவித்து வருகிறார் கஸின்ஸ் அம்மையார். உலகத்தில் சிறந்த மாதர்களில் ஒருத்தி யெனக் கொண்டாடப்படும் கஸின்ஸை பிரிட்டிஷார் இவ்வளவு கடினமாக தண்டித்ததைக் கண்டித்து அவளை விடுதலை செய்ய வேண்டுமென அமெரிக்காவில் நியூயார்க் கூட்டமென்றில் அநேகர் பேசியிருக்கிறார்கள்.

பொம்மைக் கோலு!

டெல்லி சட்ட சபையில் 'ராஜன் பக்ஸ் ஷா' என்ற அங்கத்தினர் தாய் பாஷையாகிய உருதுவில் பேசிய பேச்சின் பகுதி :—

"இந்த தேசத்தை சீக்கியரும், மராட்டியரும், திப்பு சுல்தானும் ஆண்டு கொண்டிருந்தபோது, இப்போதிருப்பதை விட அதிக சந்தோஷமாய் ஜனங்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர். இப்போது வாய்க்கால் வெட்டிக் கொடுப்பதாகவும், ரயில்வே போட்டிருப்பதாகவும் பிரமாதமாக வாயளப்பு அளந்தாலும் குடிகள் படுகின்ற கஷ்டமோ கொஞ்சம் நஞ்சமன்று. இப்போது லாபம் யாருக்கு? வரியாகப் பணம் வாங்கும் சர்க்காருக்கும், வட்டிக்குப் பணம் கொடுக்கும் சவுக்காருக்கும் தான் குஷால்! பெரிய பெரிய உத்தியோகஸ்தர்கள் சுற்றுப் பிரயாணம் செய்வதாலும் ஷோக்கான பங்களாக்களில் இறங்குவதாலும் ஏழைக்கு நஷ்டமே யன்றி துளியாவது லாபமில்லை. விவசாயத் தொழிலில் பழக்கமுடையவன் மாஜிஸ்திரேட்டா யிருந்தால் விவசாயியின் கஷ்டத்தை அப்போதே அறிந்து கொள்வான். கிருஷிகனுக்கு யார் இரங்குகிறார்கள்?"

கற்பனைச் சட்டடங்கள்!

சட்டக் கல்லூரிகளை தகர்த்தெறிய வேண்டுமென பிரபுல்ல சந்திர ரே சொல்லுகிறார். ஆனால் அவர் ஸர்வாதிகாரியாகிய உடனே அவரிடம் சட்டக் கல்லூரி உபாத்தியாயர்கள் தூது போய் "பிழைப்புக்கு மண் போடாதீர்கள்" என்று கெஞ்ச மாட்டார்களா? சில மாணவர்களின் தந்தைமார்களும் பிரபுல்லரிடம் அப்போது கெஞ்சுவார்கள். "வேலையில்லாத் திண்டாட்டத்தினால் மாணவ புஷ்பங்கள் வாடி வதங்குவதற்கு விடலாகாது. சட்ட கலாசாலையில் பிள்ளைகள் படித்துக் கொண்டிருந்தால் தானே வரதக்ஷிணை என்ற அறுவடையை நாங்கள் அடைய முடியும்" என்று தகப்பன்மார் கெஞ்சுவர். அப்போது ஆச்சாரியாரே என்ன செய்வாரென பத்திரிக்கைக்காரர் கேட்கின்றார்.

இந்திய கோகிலம்

ஸரோஜினி தேவியை இந்திய 'கோகிலம்' என்று ரஸிகர் அழைக்கின்றனர். அவளது கவிதைகள் பல இன்றைக்கும் ஆங்கில மக்களால் போற்றப்படுகின்றன. உதாரணமாக இப்போது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சிறந்த கவிதைகளைப் பொறுக்கி யெடுத்து ஓர் கவிதைக் கொத்து சேர்த்திருக்கின்றனர். அதில் ஸரோஜினி தேவியின் 'ஸாம்ராஜ்யப்' பாடல்களும் சேர்க்கப் பட்டிருக்கின்றன. ஆனால் ஸரோஜினி தேவியோ பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தாரால் சிறை பிடிக்கப்பட்டிருப்பவள்!

அமெரிக்க கண் காட்சியில்

சிகாகோவில் நடக்க ஏற்பாடாகி வரும் உலகக் கண் காட்சியில் இந்தியச் சாமான்கள் இருக்கப் போவதில்லையாம். இந்திய துரைத்தனம் அந்த அமெரிக்கக் காக்ஷியில் சிரத்தை காட்டாததே இதற்கு முக்கிய காரணம். பிரிட்டனில் நடந்த காக்ஷிச் சாலையில் மட்டும் இந்தியா பங்கெடுத்துக் கொள்ளுமாறு இந்திய துரைத்தனத்தார் ஏற்பாடு செய்தார்கள். அமெரிக்கக் கண் காட்சியிலும் இந்தியாவுக்கு இடம் கிடைக்குமாறு ஏன் முயன்றிருக்கலாகாது?

மகாத்மா காந்தி எழுதிய

மகா தியாகம்

தபாற் கூலி உள்பட 5 அணு ஸ்டாம்பு அனுப்பவும்

சுதந்திரச் சங்கு காரியாலயம்

பிரிட்டனுக்கு நாமமா?

அயர்லாந்தின் முடியானவர்கள் வருஷந்தோறும் 'வருஷாசனம்' என்று ஓர் தொகையைத் தவருமல் பிரிட்டனுக்கு செலுத்திக் கொண்டிருந்தனர். எமன் டிவேலரா தலைவனாக வந்தவுடன் அவன் பிரிட்டனுக்கு பட்டை நாமம் குழைத்துப் போட ஏற்பாடு செய்து விட்டான். வருஷாசனப் பணத்தை வசூல் செய்தானே யன்றி அதை பிரிட்டனுக்குத் தர மறுத்து விட்டான். இது சம்பந்தமாக தகராறு முற்றி, இந்தப் பிரச்னை மீது மறு தேர்தல் நடந்து, அதிலும் டிவேலராவுக்கே பெரும் வெற்றி கிடைத்தது கண்டு பிரிட்டிஷார் திடுக்கிட்டிருக்கின்றனர்.

அத்தோடு இந்தத் தகராறு நிற்க வில்லை. பிரிட்டிஷார் ஐரிஷ்காரர் மீது பழிக்குப் பழி வாங்குவதற்காக இறக்குமதியாகும் ஐரிஷ் சாமான்களின் மீது அதிக வரி போட்டனர். டி வேலரா துரைத்தனமும் சளைக்க வில்லை. பிரிட்டிஷ் சாமான்களின் மீது அதிக தீர்வையும் போடப்பட்டது. ஆனல் பிரிட்டிஷாருக்கு பால், இறைச்சி முதலியன அயர்லாந்தினின்றே இறக்குமதியாக வேண்டும். என் செய்வது?

அயர்லாந்தின் மீது மகா வயிற்றெரிச்சல் காட்டுபவன் இந்தியத் துரோகியாகிய சர்ச்சில் என்பான். அவன் சிறி விழுந்து அன்று பார்லிமெண்டில் சில கேள்விகள் கேட்டான். தாமஸ் என்ற அதிகாரி சொன்ன பதிலை 'பிரீ பிரஸ்' தந்தி தந்திருக்கிறது. "வருஷாசனத் தொகையில் 46 லக்ஷம் பவுனை அயர்லாந்தினர் நிறுத்திக் கொண்டிருக்கிருர்கள். ஆனல் அயர்லாந்து சாமான்கள் மீது கிடைத்த அதிகத் தீர்வைப் பணமோ 21 லக்ஷம் பவுன் தான்" என்று மூக்கால் அழுது கொண்டே பிரிட்டிஷ் அதிகாரி கூறி யிருக்கிருர்.

பிரிட்டிஷாருக்கு வருஷாசனப் பண விஷயத்தில் இனி சாச்வத நாமம் தானு, அல்லது சமரசப் பேச்சுக்கு டி வேலராவால் செய்யப்படும் சாமர்த்தியமா வென்பது இன்னும் உலகுக்கு தெரிய வில்லை. உள்ளங்கை அகல முள்ள அயர்லாந்து, பராக்கிரமம் மிகுந்த பிரிட்டனேடு இப்படி எதிர்த்து நிற்பதற்குக் காரணம் ஐரிஷ் மக்களின் வீரமும், தேச பக்தியும் தான் அல்லவா.

'பக்கா' எதேச்சாதிகாரம்

அங்கு டில்லி சட்ட சபை நீண்டு விட்டது. இங்கு சென்னை சட்ட சபையும் நீளப்பார்க்கின்றது. சட்ட சபைகளை "மார்க்கண்டன்" களாக வைத்துக்கொள்ளச் சர்க்காருக்குப் பிரியமோ என்னமோ தெரியவில்லை. உலகில் எந்தத் தேசத்திலுமில்லாத காரியங்களை யெல்லாம் பிரிட்டிஷ் துரைத்தனம் இந்தியாவில் செய்துவிட்டு, "நாகரிக ராஜாங்கம்" என தன்னை யழைத்துக் கொள்வது சுத்த வெட்கக் கேடு.

கொஞ்சம் ராஜீயம் பேசுவோம். சட்டசபை என்பதென்ன? அதற்கு அங்கத்தினர்கள் எப்படித் தெரிந்தெடுக்கப்படுகிருர்கள்? வோட்டர்களின் உரிமைகள் என்ன? இவற்றைக் கவனித்தால் சர்க்கார் செய்கையின் சாயம் நன்கு வெளுத்து விடும். ஒரு வாக்காளர் ஒரு மெம்பருக்குவோட்டுக்கொடுத்துத் தெரிந்தெடுக்கையில், சட்ட சபையைப் பொறுத்தமட்டில் அவருக்கு 3 வருஷங்களுக்கே உயிர் கொடுக்கின்றனர். இந்தக் காலத்திற்குள் ஒரு மெம்பரின் நடத்தை வாக்காளருக்குப் பிடிக்க வில்லை யென்றால், 3 வருஷங்களுக்குப் பின் அவரை நீக்கி,வேறொருவரைத் தெரிந்தெடுத்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்துடனேயே அவர்கள் வோட்டு செய்கின்றனர். ஆனல் சட்ட சபைகளைச் சர்க்கார் நீட்டுவதால் வோட்டர்களுக்கு இஷ்டமில்லாத மெம்பர்கள் இன்னும் நெடுநாள் இருக்கவேண்டி ஏற்படுகின்றது. வாக்காளரின் உரிமையைப் பறிக்கும் இச்செய்கை 'பக்கா' எதேச்சாதிகார மல்லவா?

"வைஸ்ராய் என்பது யார்?"

டெல்லியில் 'முனி' என்ற ஒரு பயில்வானுக்கும் சில கான்ஸ்டபிள்களுக்கும் நடுத்தெருவில் குஸ்தி நடந்தது. ஒரு கான்ஸ்டபிலுக்கு பலமான அடி. பயில்வான் கைது செய்யப்பட்டு கோர்ட்டுக்கு அழைத்துச் செல்லப் பட்டான். "ஏண்டா போலீஸ்காரர்களை அடித்தாய்?" என்று மாஜிஸ்திரேட் கேட்டார். "நான் ஒரு தெருவில் போவதை இவர்கள் ஏன் தடுத்தார்கள்? அவ்வாறு தடுக்கலாமா?" என்ற முனியன் கேட்டான். "அந்தத் தெரு வழியே வைஸ்ராய் போய்க் கொண்டிருந்தாரென்பதை நீ அறியாயோ?" என்ருர் மாஜிஸ்திரேட். "பிரபுவே! வைஸ்ராய் என்பது யார்?" என்று கேட்டான் டெல்லிவாசியான முனியன். பிறகு அவனுக்கு காவல் தண்டனை விதிக்கப் பட்டது.

பொறுக்கிய புஷ்பங்கள்

சேலத்தில் துண்டுப் பிரசுரம் வழங்கியதாக 4 தொண்டர்களைக் கைது செய்து இரவில் விடுவித்தனர்.

கள்ளிக்கோட்டையில் 'கேரள காங்கிரஸ் தபால் இலாக்கா' என்னும் தலைப்பில் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் தெருக்களில் தொண்டர்களால் விநியோகம் செய்யப்பட்டது.

கல்கத்தாவில் 'அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி" என்று அதிகாரம் பெறாத பிரசுரங்களை வைத்திருந்ததற்காக இருவருக்கு தலா மூன்று மாத . காங்கிரஸ் சம்பந்தமாக எல்லைப் புறத்துக்குப் போன அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மெம்பரான ஸ்ரீயுத சோகன் லால் பெஷாவர் ஸ்டேஷனில் கைதியானார்.

லாகூரில் "பிரதாப்" பத்திரிகையின் சொந்தக்காரரின் புதல்வரான வீரேந்திர சென் என்பவர் கிரிமினல் லா சட்டப்படி கைதியானார்.

லாகூரில் நவஜவான் பாரத சபை அங்கத்தினர்களில் நால்வர் கிரிமினல் லா சட்டப்படி கைதியானார்கள்.

ராஜமகேந்திரபுரத்தில் கிழக்கு கோதாவரி ஜில்லா மகா நாடு முடிந்த பிறகு ஊர்வலம் நடத்தியதற்காக அதன் அக்கிராசனர், வரவேற்புக் கமிட்டித் தலைவருள்பட 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

கண்ணனூரில் 4 தொண்டர்கள் கள்ளுக்கடை மறியல் செய்த போது கைது செய்யப்பட்டு இரவு 10 மணிக்கு விடுவிக்கப் பட்டனர். மறுபடி இரவில் மற்றொரு தொண்டர் படை தேசியக் கொடியுடனும், பஜனையுடனும் ஊர்வலம் சென்று துண்டுப் பிரசுரங்களும் வழங்கி, காங்கிரஸின் கொள்கைகளைப் பற்றி பிரசங்கமும் செய்தது. காந்தி தினத்தன்று கைதியான 14 பேர்களில் ஒருவர் தவிர மற்றவர்களை விடுவித்து விட்டனர்.

மதுரையில் ஸ்ரீமதி பார்வதவர்த்தனி அம்மாளின் அபராதத் தொகைக்காக அவரது கணவரின் கம்பெனிக்குச் சொந்தமான சாமான்கள் ஜப்தி செய்யப் பட்டிருந்ததை சர்க்கார் திரும்பக் கொடுத்து விட்டார்களாம்.

ராஜமகேந்திரபுர ஜெயிலில் சென்ற 4 மாதங்களாக உண்ணாவிரத மிருந்து வரும் லாகூர் சதியாலோசனைக் கைதிகளான ஜயதேவ் கபூர், சின்ஹா, வர்மா மூவரும் உண்ணாவிரதத்தை நிறுத்தி விடப் போவதாகத் தெரிகிறது.

சிவகாசியில் நடந்த நாடகத்தில் தீண்டாமை விஷயமாக பாடக் கூடாதென்று போலீசார் வந்து தடை செய்தனராம்.

சிவகாசியில் ஏற்படுத்தி யிருக்கும் இராப் பள்ளிக்கூடத்தில் ஹரிஜன மாணவர்கள் உள்பட 150 பேர்கள் சேர்ந்து படிக்கின்றனராம்.

வட ஆற்காடு ஜில்லா தீண்டாமை விலக்கு சங்கத்தின் ஆதரவில் நடந்த வியாசப் போட்டியில் ஸ்ரீமான்கள் முத்துக்கிருஷ்ணன் (அம்பாசமுத்திரம்) இராஜையா (கூனூர்) தேவராஜன் (சென்னை) மூவருக்கும் முறையே முதலாவது இரண்டாவது, மூன்றாவது பரிசுகள் கிடைத்திருக்கின்றனவாம்.

காந்திஜியால் நடத்தப் பட்டுவரும் "ஹரிஜனம்" என்னும் பத்திரிகையை கைதிகளுக்கு இனமாக வழங்க அநுமதி தர வேண்டுமென்று கோரிய ஹரிஜன ஊழியச் சங்கத் தலைவருக்கு அநுமதி தர முடியாதென்று பம்பாய் கவர்ன்மெண்டார் கூறி விட்டனர், தீண்டாமை என்னும் விஷயம் அபிப்பிராய பேதமும், தகராறும் உடையதாம்!

ஹரிஜனங்களின் கல்விக்கும், சமூக முன்னேற்றத்துக்காகவும் வசதிகளை ஏற்படுத்த மத்திய கவர்ன்மெண்டு நிதியிலிருந்து 55 லக்ஷம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று ராஜா பகதூர் கிருஷ்ணமாச்சாரியும், எம். ஸி. ராஜாவும் டெல்லி சட்ட சபையில் தீர்மானம் கொண்டு வரப் போவதாக அறிவித்திருக்கின்றனர்.

"மகாத்மா காந்தி வசீகரமான தோற்றமுடையவரா யில்லா விட்டாலும் எல்லோரையும் வசப்படுத்தக் கூடிய ஒரு அபூர்வ சக்தி அவருக் கிருக்கிறது. ஒரு வரையறைக்குட்பட்டு பலரையும் ஒன்று திரட்டி நடத்தும் அரிய திறமை அவருக்கு இருக்கிறது. காரியத்தைச் சாதித்துக் கொள்வதில் மிக சமர்த்தர்" என்று சிகாகோவில் ஷவ்கத் அலி பேசினாராம்.

சீன-ஜப்பானிய சச்சரவு சம்பந்தமாக சர்வ தேச சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட கமிட்டியோடு ஒத்துழைக்க சோவியத் ருஷியா மறுத்து விட்டது.

Edited and Published by S. Subramaniam
and Printed by M. R, Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.